# வரவு-செலவுத் திட்டம் 2019-2020

## சிறப்பம்சங்கள்

**பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்**
**அருமை உடைய செயல்**

**(குறள் 975)**

- முதன்மைத் துறையை ஊக்குவித்து, அதை வலுப்படுத்தும் அதே வேளையில், உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் கூடுதல் முதலீடுகளை ஈர்ப்பதற்கும் இந்த அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

- சமச்சீரான வளர்ச்சி அடைந்து அதன் பலன் அனைவரையும் சமமாகச் சென்றடையும் வகையில் தொழில் துறை உள்ளிட்ட இரண்டாம் நிலை துறைக்கும், வேளாண் துறைக்கும் இந்த அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகிறது.

- 2011–2012 ஆம் ஆண்டில் மாநிலத்தில் 1,03,600 ரூபாயாக இருந்த தனி நபர் வருமானம் 2017–2018 ஆம் ஆண்டில், நிலையான விலைகளின் அடிப்படையில், 1,42,267 ரூபாயாக உயர்ந்துள்ளது.

- 2017–2018 ஆம் ஆண்டில், முன் மதிப்பீடுகளின்படி, நிலையான விலைகளின் அடிப்படையில், தேசியப் பொருளாதார வளர்ச்சி 7.20 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ள நிலையில், அதே ஆண்டில் மாநிலப் பொருளாதார வளர்ச்சியானது 8.09 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. 2018–2019 ஆம் ஆண்டில் முதல்நிலை மதிப்பீடுகளின்படி, மாநிலப் பொருளாதார வளர்ச்சி 8.16 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், உயர் வளர்ச்சிப் பாதையில் மாநிலம் செல்ல வழிவகை ஏற்பட்டுள்ளது.

- வறுமை, கல்வியறிவின்மை, வேலையின்மை, சுகாதாரக் குறியீடுகள் மற்றும் பாலின சமத்துவம் போன்ற குறியீடுகளில் 100 பிற்படுத்தப்பட்ட வட்டாரங்களில் சிறப்புக் கவனம் செலுத்தி மாநிலத்தில் சமச்சீரான வளர்ச்சியை அடைவதற்காக, மாநில சமச்சீர் வளர்ச்சி நிதிய (State Balanced Growth Fund) திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- இந்த வரவு–செலவுத் திட்டத்தில், இந்நிதியத்திற்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று, 'சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு', 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 75 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்திற்கு (TANII) 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- வரிவருவாயில் ஏற்பட்டுள்ள இந்த சாதகமான மாற்றத்தினால் 2018–2019 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் கணிக்கப்பட்ட வருவாய்ப் பற்றாக்குறை 19,319 கோடி ரூபாயிலிருந்து 2019–2020 ஆம் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறை 14,315 கோடி ரூபாயாகக் குறையும் என கணிக்கப்பட்டுள்ளது.

- மாநிலங்களுக்கு இடையேயான ஒருங்கிணைந்த பொருட்கள் மற்றும் சேவைகள் வரி வருவாயில் 2017–2018 ஆம் ஆண்டில் மாநிலத்திற்கு கிடைக்க வேண்டிய 5,454 கோடி ரூபாய் அளவிலான பங்கையும், பொருட்கள் மற்றும் சேவைகள் வரியில் 455.16 கோடி ரூபாய் அளவிலான உறுதிசெய்யப்பட்ட இழப்பீட்டுத் தொகையும் மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்கு இதுவரை கிடைக்கப் பெறவில்லை. இந்த நிலுவைத் தொகைகளை விடுவிப்பதில் மத்திய அரசு செய்யும் தாமதம் மாநிலத்தின் நிதிநிலையின் மீது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது

- சென்னை திறன்மிகு நகர நிறுவனம் மூலம் 660 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட உள்ள அறிவுசார் போக்குவரத்து அமைப்புத் திட்டத்தினை (Intelligent Transport System Project) தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் உருவாக்கியுள்ளது.

- இரண்டு இலட்சம் நான்கு சக்கர வாகனங்கள், இரண்டு இலட்சம் இரு சக்கர வாகனங்களை நிறுத்தக்கூடிய அளவில், நிலத்தடி வாகன நிறுத்த வசதிகள், பன்னடுக்கு வாகன நிறுத்த வசதிகள் மற்றும் சாலையோர திறன்மிகு வாகன நிறுத்தம் ஆகியவற்றை செயல்படுத்த 'விரிவான ஒருங்கிணைக்கப்பட்ட வாகன நிறுத்த மேலாண்மைத் திட்டத்தை', அரசு–தனியார் பங்களிப்பு

முறையின் கீழ், 2,000 கோடி ரூபாய் செலவில் சென்னை நகரில் இந்த அரசு செயல்படுத்தும்.

**பேரிடர் மேலாண்மை**

- 2019–2020 ஆம் ஆண்டிற்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதியத்திற்காக 825 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- கஜா புயல் ஏற்படுத்திச் சென்ற பாதிப்பைத் தணிப்பதற்கான தற்காலிக மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக, தேசியப் பேரிடர் நிவாரண நிதியத்திலிருந்து மத்திய அரசு 900.31 கோடி ரூபாயை விடுவித்தது.

- இந்த நிதி ஆதாரங்களுடன் மாநிலத்தின் சொந்த நிதியையும் ஒருங்கிணைத்து, பயிர் சேதங்களுக்காக 774.13 கோடி ரூபாயும், உதவி நிவாரணத்திற்காக 577.46 கோடி ரூபாயும், வீடுகள் மற்றும் குடிசைகள் சேதமடைந்த குடும்பங்களுக்கு நிவாரணமாக 401.50 கோடி ரூபாயும், மீனவர்களின் சேதமடைந்த படகுகளுக்காக 41.63 கோடி ரூபாய் உட்பட, ஆக மொத்தம் உடனடி நிவாரணப் பணிகளுக்காக 2,361.41 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

- குடிசைகள், தென்னை மரங்கள் மற்றும் மீனவர்களின் எப்.ஆர்.பி. படகுகளுக்கு ஏற்பட்ட சேதத்திற்கான இழப்பீட்டுத் தொகையை, மாநிலப் பேரிடர் நிவாரண நிதியத்தின் வரையறையைவிடக் கூடுதலாக இந்த அரசு கணிசமாக உயர்த்தி வழங்கியுள்ளது. மேலும், தற்போது நிலவிவரும் வறட்சியைக் கருத்தில் கொண்டு குடிநீர் பற்றாக்குறை ஏற்படாமல் தடையின்றி குடிநீர் வழங்க இதுவரை 157 கோடி ரூபாய் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதியத்திற்காக 825 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- சேதமடைந்த குடிசைகளுக்கு மாற்றாக கான்கிரீட் வீடுகள் கட்டுதல், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் தென்னை மற்றும் இதர மரத்தோட்டப் பயிர்களை மீண்டும் பயிர் செய்தல் போன்ற நிரந்தர நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக தனியே ஒரு திட்ட அலுவலகம் உருவாக்கப்பட்டுள்ளது. தென்னை மற்றும் இதர மரத்தோட்டப் பயிர்களை மீண்டும் பயிரிடுவதற்காக, இதுவரை 230.09 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

- கஜா புயல் பாதித்த மாவட்டங்களில் சேதமடைந்த குடிசைகளுக்கு மாற்றாக ஒரு வீட்டுக்கு 1.70 இலட்சம் ரூபாய் அலகுத் தொகை வீதம், 1,700 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், ஒரு இலட்சம் வீடுகள் கட்டுவதற்கான பணிகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. இத்திட்டச் செலவில், 720 கோடி ரூபாயை மத்திய அரசு தனது பங்காக ஏற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கிறேன். மீதமுள்ள 980 கோடி ரூபாயை மாநில அரசின் பங்குத் தொகையாக தமிழ்நாடு ஊரக வீட்டுவசதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் மூலம் கடன் பெற்று இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

- ஒரு சிறப்பு முயற்சியாக, நீர் ஆதாரங்களைப் பெருக்குவதற்காகவும், வெள்ளத் தடுப்பிற்காகவும், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் உள்ள ஒரத்தூர் கிராமத்திற்கு அருகே அடையாறு ஆற்றின் உப நதியான ஒரத்தூர் நதியின் குறுக்கே உப வடிநிலங்களுக்கு இடையே நீர் பரிமாறும் கால்வாயுடன் கூடிய நீர்த்தேக்கம் அமைத்தல்; குறிஞ்சிப்பாடி வட்டத்தில் பரவனாற்றின் ஆற்றுப் படுகையை மறுசீரமைத்தல் **(Regrading)** மற்றும் அருவாள்முக்கு நீட்சியிலிருந்து வெள்ள நீரினைத் திருப்புவதற்கான புதிய கால்வாயை அமைத்தல்; சிதம்பரம் வட்டத்திலுள்ள பேரம்பட்டிற்கு அருகில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே புதிய வெள்ளத் தடுப்பு நீரொழுங்கியை அமைத்தல்; சிதம்பரம் வட்டத்தில் கடல்நீர் உட்புகுவதைத் தடுப்பதற்காக, பிச்சாவரம் கிராமத்தின் அருகில் உப்பனாறு ஆற்றின் குறுக்கே கடைமடை நீரொழுங்கியை அமைத்தல் மற்றும் 10 இதர பணிகள் உட்பட நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகளை 284.70 கோடி ரூபாய் மொத்தச் செலவில் இந்த அரசு வரும் நிதியாண்டில் மேற்கொள்ளும்.

**வருவாய் நிர்வாகம்**

- மதுரை மாவட்டத்தில் உள்ள திருமங்கலத்தை தலைமையிடமாகக் கொண்டு, திருமங்கலம், கள்ளிக்குடி மற்றும் திருப்பரங்குன்றம் ஆகிய மூன்று வட்டங்களை உள்ளடக்கிய புதிய வருவாய்க் கோட்டம் ஒன்று 2019–2020 ஆம் ஆண்டில் உருவாக்கப்படும்.

- 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சமூகப் பாதுகாப்பு உதவித் தொகை வழங்கும் திட்டங்களுக்காக 3,958 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ❖ ஆட்சேபகரமற்ற புறம்போக்கு நிலங்களில் ஐந்தாண்டுகளுக்கும் மேலாக ஆக்கிரமித்து வசித்து வருபவர்களின் வீட்டு மனைகளை வரன்முறை செய்து வீட்டுமனைப் பட்டா வழங்க இந்த அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் சுமார் **1.5** இலட்சம் குடும்பங்கள் பயன்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது

- ❖ வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் அனைத்துக் குடும்பங்களுக்கும் பயனளிக்கும் வகையில், விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் ஒன்றை இந்த அரசு விரைவில் அறிமுகப்படுத்தும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம், இயற்கை மரணம் மற்றும் விபத்தால் ஏற்படும் மரணத்தின்போது வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை, முறையே இரண்டு இலட்சம் ரூபாய் மற்றும் நான்கு இலட்சம் ரூபாயாகவும், விபத்தால் ஏற்படும் நிரந்தர ஊனத்திற்காக வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை ஒரு இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தப்படும். இத்திட்டத்திற்கான காப்பீட்டுக் கட்டணத் தொகைக்கு **250** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ❖ **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், உழவர் பாதுகாப்புத் திட்டத்திற்காக **169.81** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வருவாய்த் துறைக்கு மொத்தமாக **6,106.95** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்மொழி வளர்ச்சி**

- ❖ ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை வெற்றிகரமாக நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, பிற சர்வதேச பல்கலைக்கழகங்களிலும் இதுபோன்ற தமிழ் இருக்கைகளை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது.

- ❖ **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தமிழ் வளர்ச்சித் துறைக்காக **54.76** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சட்டம் ஒழுங்கு**

- ❖ **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 'காவல் துறை நவீனமயமாக்கல்' திட்டத்திற்காக **111.57** கோடி ரூபாய் உட்பட காவல் துறைக்கு **8,084.80** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்**

- **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு **403.76** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சிறைச்சாலைகள்**

- **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சிறைச்சாலைகள் துறைக்காக **319.92** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நீதி நிர்வாகம்**

- **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், நீதி நிர்வாகத்திற்காக **1,265.64** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வேளாண்மை**

- **2019–2020** ஆம் ஆண்டில், பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், புதிய பயிர்களையும், பகுதிகளையும் சேர்க்க இந்த அரசு அறிவிக்கை செய்ய உள்ளது. குறிப்பிட்ட பகுதிக்குள் ஏற்படும் இடர்பாடுகளான (Localised Calamities) ஆலங்கட்டி மழை, நிலச்சரிவு, வெள்ளப்பெருக்கு போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புகளோடு இடிமின்னலுடன் கூடிய திடீர் மழை (Cloud Burst) மற்றும் இயற்கை தீயினால் (Natural fire) ஏற்படும் பாதிப்புகளும் இத்திட்டத்தில் சேர்க்கப்படும்.

- **2018–2019** ஆம் ஆண்டில், இதுவரை **21.70** இலட்சம் விவசாயிகள் ‘பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்’ கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இது, கடந்த மூன்று ஆண்டுகளில் உயரிய சாதனையாகும்.

- **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்கான காப்பீட்டுக் கட்டணத்தில் மாநில அரசின் பங்குத் தொகைக்காக **621.59** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **2018–2019** ஆம் ஆண்டில் **1.80** இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் நுண்ணீர் பாசனத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. **2019–2020** ஆம் ஆண்டில் **1,361** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேலும் இரண்டு இலட்சம் ஹெக்டேர்

பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். 2019–2020 ஆம் ஆண்டில், 84.09 கோடி ரூபாய் மானிய உதவியுடன், 10 குதிரை திறன் வரை உள்ள சூரிய சக்தியால் இயங்கும் 2,000 பம்பு செட்டுகளை விவசாயிகளுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

- 2019–2020 ஆம் ஆண்டில் மேலும் 5,000 ஒருங்கிணைந்த பண்ணை அலகுகள் 25 மாவட்டங்களில் 101.62 கோடி ரூபாய் திட்டச் செலவில் கூடுதலாக அமைக்கப்படும்.

- 2019–2020 ஆம் ஆண்டில், 100.42 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், 2,000 உழவர் உற்பத்தியாளர் குழுக்களும், 100 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளும் அமைக்கப்படும். உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் நிலைத்துச் செயல்பட அவற்றை ஒருங்கிணைப்பது அவசியத் தேவையாக உள்ளது. உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை மாநில அளவிலும், மண்டல அளவிலும் ஒருங்கிணைப்பதற்கான முயற்சிகளை அரசு எடுத்து வருகிறது. உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு ஊக்கமளிக்க, தமிழ்நாடு உழவர் உற்பத்தியாளர் அமைப்புக் கொள்கை ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது.

- குறைந்தபட்ச ஆதரவு விலை திட்டத்தின் கீழ், பெரிய அளவில் உளுந்தை கொள்முதல் செய்யும் திட்டம் தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக செயல்படுத்தப்பட்டது.

- கரும்பிற்கு மத்திய அரசு அறிவித்த நியாயமான மற்றும் ஆதாய விலையினை விட (Fair and Remunerative Price) கூடுதலாக 2018–2019 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டுவரும் கரும்பு உற்பத்தி ஊக்கத்தொகையானது, 2019–2020 ஆம் ஆண்டிலும் வழங்கப்படும். இதற்கென 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- கூடுதலாக 70 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை தேசிய வேளாண் மின்னணுச் சந்தை திட்டத்தின் கீழ் 2019–2020 ஆம் ஆண்டில் ஒருங்கிணைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- வரும் நிதியாண்டில் 128 வட்டார அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்களையும், 360 கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள்

வாடகை மையங்களையும் நிறுவவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. **2019–2020** ஆம் ஆண்டில் வேளாண் இயந்திரமயமாக்கலுக்காக **172.06** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ❖ பழங்கள் மற்றும் காய்கறிகள் சாகுபடி செய்வதை ஊக்குவிக்கும் முதலமைச்சரின் சிறப்புத் திட்டம் **2019–2020** ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும். இதற்கென **50** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநில அரசின் தோட்டக்கலை பண்ணைகளின் மூலம் உண்மைத் தன்மையை சரிபார்த்து வில்லை ஒட்டிய காய்கறி விதைகளை (**Truthfully labelled vegetable seeds**) உற்பத்தி செய்து, தேவைப்படும் இடங்களில் போதிய அளவு விநியோகிக்கப்படும்.

- ❖ ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கத்திற்காக **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **100** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ❖ உணவு பதப்படுத்தும் துறையில் முதலீடு செய்வதற்கு தனியார் முதலீட்டாளர்கள் ஆர்வமுடன் உள்ளனர் என்பதையும், பிரான்ஸ் நாட்டு நிறுவனம் சென்னைக்கு அருகில் ஒருங்கிணைந்த உணவு பதப்படும் பூங்காவை **2,000** கோடி ரூபாய் முதலீட்டில் அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

- ❖ வேளாண் பொருட்களின் ஏற்றுமதியின் முக்கியத்துவத்தை இந்த அரசு உணர்ந்துள்ளதால், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்ககத்தில் ஒரு சிறப்பு வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டு அலகினை (Export Promotion Cell) இந்த அரசு ஏற்படுத்தும். இயற்கை வேளாண்மை (organic farming) மற்றும் பிற தரச்சான்றிதழ் அளித்தல், விவசாயிகளுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் ஊக்கத்தொகை வழங்குதல் போன்ற அனைத்து ஏற்றுமதி சம்பந்தமான ஊக்குவிப்பு நடவடிக்கைகளை இந்த மையம் ஒருங்கிணைத்து செயல்படுத்தும்.

- ❖ இயற்கை வேளாண்மையை மேம்படுத்துவதற்கு, மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இயற்கை வேளாண்மை சான்று அளிக்கும் மையங்கள் அமைக்கப்படும்.

- 2019–2020 ஆம் ஆண்டில் அரசு வேளாண்மைக் கல்லூரிகள் மற்றும் தோட்டக்கலைக் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை தொடர்ந்து மேம்படுத்துவதற்காக 79.73 கோடி ரூபாய் செலவிடப்படும்.

- 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்திற்காக 300 கோடி ரூபாயும், நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்திற்காக 87.22 கோடி ரூபாய் உட்பட வேளாண்மைத் துறைக்கு 10,550.85 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கூட்டுறவு**

- 2019–2020 ஆம் ஆண்டில், 10,000 கோடி ரூபாய் அளவிற்கு பயிர்க் கடன் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தவிர, பயிர்க் கடன்கள் மீதான வட்டித் தள்ளுபடிக்காக 200 கோடி ரூபாய் வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம்**

- விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டம் 2019–2020 ஆம் ஆண்டில் 49.83 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 2011–2012 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட விலையில்லா வெள்ளாடுகள் அல்லது செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 8.72 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. 2019–2020 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 198.75 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தீவன அபிவிருத்தித் திட்டமும் 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். ‘அசீல்’ இன நாட்டுக்கோழி வளர்ப்பினை ஊக்கப்படுத்துவதற்காக, 2018–2019 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட சிறப்புத் திட்டம் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2019–2020 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

- 2019–2020 ஆம் ஆண்டில், கால்நடை நிலைய கட்டடங்கள் கட்டுமானத்திற்காக 60.27 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **2019–2020** ஆம் ஆண்டில் பால் பதப்படுத்துவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்கு **200** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- மரபுத் திறன் மிக்க நாட்டின மற்றும் கலப்பினக் காளைகளைக் கொண்டு **100** கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் புதிய உறைவிந்து உற்பத்தி நிலையம் அமைக்கப்படும்.

- **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்திற்கான மதிப்பீடுகளில் கால்நடை பராமரிப்புத் துறைக்கு **1,252.41** கோடி ரூபாயும், பால்வளத் துறைக்கு **258.45** கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**மீனளம்**

- மீன்பிடி தடைக்காலத்திலும், மீன்பிடி குறைவாக உள்ள காலத்திலும் வழங்கப்படும் உதவித்தொகைத் திட்டத்திற்காக **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **170.13** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- இது தவிர **420** கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் வெள்ளப்பள்ளம், தரங்கம்பாடி மற்றும் திருவொற்றியூர் குப்பம் ஆகிய இடங்களில் மீன்பிடி துறைமுகங்களைக் கட்டுவதற்கும் இந்த அரசு அனுமதி அளித்துள்ளதுடன், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நீரோடி, மார்த்தாண்டத்துறை மற்றும் வில்லவிளை ஆகிய இடங்களில் கடலரிப்புத் தடுப்பான்களை **116** கோடி ரூபாய் செலவில் அமைப்பதற்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது

- வரும் ஆண்டில் **80** ஆழ்கடல் மீன்பிடி படகுக் குழுக்களுக்கு **240** நேவிக் தகவல் பெறும் கருவிகள், **160** ஐசாட்–**2** செயற்கைக்கோள் தொலைபேசிகள் மற்றும் **160** நேவ்டெக்ஸ் கருவிகளையும் அரசு வழங்கும்.

- **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மீனளத் துறைக்காக **927.85** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நீர்வள ஆதாரங்கள் மற்றும் பாசனம்**

- 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பொதுப்பணித் துறையின் கீழ் உள்ள ஏரிகளை மக்கள் பங்களிப்புடன் புனரமைக்கும் 'குடிமராமத்து' திட்டத்திற்கு 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் உள்ள சிறிய பாசன ஏரிகளையும் புனரமைப்பதற்கு மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் இது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- 30 மாவட்டங்களில் உள்ள 66 உப வடிநிலப் பகுதிகளில் 2,962 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (Irrigated Agricultural Modernisation Project) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்திற்காக 235.02 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- காவேரி பாசனப் பகுதிகளில் 'பருவநிலை மாற்றத் தழுவல் திட்டத்தை' ஆசிய வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன் 1,560 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் முதற்கட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள 960.66 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக 478.73 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தைத் தொடர்ந்து 37 அணைகள் மற்றும் அணை சார்ந்த கட்டமைப்புகளைப் புனரமைத்து, மேம்படுத்தும் பணிகளை, அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டத் திட்டமாக மேற்கொள்வதற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் 2020–2021 ஆம் ஆண்டு முதல், ஐந்தாண்டு காலத்தில் 610.26 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

- அத்திக்கடவு–அவிநாசி திட்டம் விரைவில் தொடங்க இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, சுய பயன்பாட்டிற்கு மின்சாரம் உற்பத்தி செய்து வழங்குவதற்கான சூரியஒளி மின்திட்டத்தை, நபார்டு வங்கி நிதியுதவியுடன் 132.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

❖ நபார்டு திட்டங்களின் கீழ் பல்வேறு பணிகளை 2019–2020 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு வரவு–செலவுத் திட்டத்தில் 811.60 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நீர்வள ஆதாரங்கள் மற்றும் பாசனத் துறைக்கு 5,983.98 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுற்றுச்சூழல் மற்றும் வனம்**

❖ நகர்மயமாதல் மற்றும் நகர்ப்புர வளர்ச்சியின் காரணமாக சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள பாதுகாக்கப்பட்ட வனங்களில் ஆக்கிரமிப்புகள் மற்றும் குப்பைகள் கொட்டுதல் போன்ற செயல்களால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டில் கான்கிரீட் மற்றும் உயிர்வேலி அமைத்து சென்னை நகரைச் சுற்றியுள்ள பாதுகாக்கப்பட்ட வனங்களைக் காப்பதற்கு 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

❖ பசுமை பருவநிலை நிதியத்தின் கீழ் ஒப்புதலை எதிர்நோக்கி, 'பள்ளிக்கரணை சதுப்புநில மீட்டெடுப்பு திட்டத்தை' 165.68 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த இந்த அரசு அனுமதித்துள்ளது.

❖ சூழல் மேம்பாட்டுப் பணிகளைத் தொடர இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 445.05 கோடி ரூபாய் மற்றும் 31.78 கோடி ரூபாய், முறையே வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**பொது விநியோகத் திட்டம்**

- பொங்கல் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 1,000 ரூபாய் வழங்கப்படும் என ஏற்கெனவே அறிவித்தபடி, 1,985.46 கோடி ரூபாயை இந்த அரசு வழங்கியுள்ளது.

- 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 6,000 கோடி ரூபாய் உணவு மானியத்திற்காகவும், பொது விநியோகத் திட்டத்தை கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுத்துவதற்கு நிதியுதவியாக 333.81 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பகிர்வு**

- 2019–2020 ஆம் ஆண்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்குவதற்காக, முறையே 6,573.61 கோடி ரூபாயும், 5,164.98 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான மத்திய நிதிக்குழு பரிந்துரையின்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியத்திற்காக 5,178.52 கோடி ரூபாய் இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஊரக வளர்ச்சி**

- 2013–2014 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட சுகாதாரம் குறித்த கணக்கெடுப்பிற்குப் பிறகு, மாபெரும் சாதனையாக, கிராமங்களில் 48.94 இலட்சம் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்பட்டதால், அனைத்து மாவட்டங்களும் திறந்தவெளியில் மலம் கழிக்காத நிலையை எட்டிய மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

- தூய்மை இந்தியா இயக்கத்திற்காக (கிராமம்) இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 400 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- நிலையான சொத்துக்களை உருவாக்கும் வகையில், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், மாநிலத்தில் முழு உத்வேகத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான அரசின் முயற்சிகளை 2019–2020 ஆம் ஆண்டிலும் தொடர்வதற்காக 250 கோடி ரூபாய் பொருட்செலவிற்கான மாநில அரசின் பங்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 25 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டு, பழுதடைந்த நிலையில் உள்ள 45,594 வீடுகளை 227.97 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பழுது நீக்கம் மற்றும் மறுகட்டுமானம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,276.14 கோடி ரூபாய் பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டத்திற்காக (ஊரகம்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டைப் போன்றே, வரும் ஆண்டிலும் மாண்புமிகு முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் 20,000 வீடுகள் கட்டித் தரப்படும். இத்திட்டத்திற்காக, 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் 420 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 18,273.96 கோடி ரூபாய் ஊரக வளர்ச்சித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நகராட்சி நிர்வாகம்**

- 2019–2020 ஆம் ஆண்டில், 'திறன்மிகு நகரங்கள்' திட்டத்திற்காக 1,650 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், அம்ருத் திட்டத்திற்காக 1,450 கோடி ரூபாயும், 'தமிழ்நாடு நகர்ப்புர முன்னோடி முதலீட்டுத் திட்டத்திற்காக' 302 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

- ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி இயக்கத்திற்காக 750 கோடி ரூபாயும், சென்னைப் பெருநகர வளர்ச்சி இயக்கத்திற்காக 500 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

- 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 'தமிழ்நாடு நிலையான நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்திற்கு' 836.39 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- நபார்டு வங்கி நிதியுதவியுடன் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளை பேரூராட்சிகளில் 2019–2020 ஆம் ஆண்டில் இந்த அரசு மேற்கொள்ளும்.

- பெருநகர சென்னை மாநகராட்சிக்கான விரிவான திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. எட்டு மண்டலங்களில் இரண்டு தொகுப்புகளாக திடக்கழிவுகளை சேகரித்துக் கொண்டு செல்வதற்கான திட்டத்தை 1,546.04 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்துவதற்கு அரசு நிர்வாக அனுமதி அளித்துள்ளது. கொடுங்கையூர் மற்றும் பெருங்குடியில் உள்ள குப்பை கொட்டும் இடங்களை சுத்திகரிப்பு செய்து அந்த இடங்களை மீட்டெடுப்பதற்கும், கழிவில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் அலகினை அமைப்பதற்குமான திட்டத்தை அரசு–தனியார் பங்களிப்பு முறையில், 5,259.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

- 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்காக 18,700.64 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**குடிநீர் விநியோகம்**

- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 2018–2019 ஆம் ஆண்டில் பகுதியளவு குடிநீர் வசதி வழங்கப்பட்ட 2,310 குடியிருப்புப் பகுதிகளில் முழு அளவு குடிநீர் வசதி வழங்குவதற்கான திட்டப் பணிகளை மேற்கொண்டுள்ள நிலையில், மீதமுள்ள 2,017 குடியிருப்புப் பகுதிகளில் 2019–2020 ஆம் ஆண்டில் முழு அளவு குடிநீர் வசதியை வழங்குவதற்கான பணிகளை மேற்கொள்ளும்.

- கரூர் மாவட்டம் க.பரமத்தி ஒன்றியம் மற்றும் அரவக்குறிச்சி ஆகிய இடங்களில் உள்ள 282 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி வழங்குவதற்கான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் உட்பட பல்வேறு பணிகள், 2019–2020 ஆம் ஆண்டில் 1,558.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

- 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ‘தேசிய ஊரகக் குடிநீர் திட்டத்திற்காகவும்’, ‘குறைந்தபட்ச தேவைகள் திட்டத்திற்காகவும்’, நபார்டு திட்டப் பணிகளுக்காகவும், முறையே

**364.76** கோடி ரூபாய், **286** கோடி ரூபாய், **600** கோடி ரூபாய் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர மேம்பாடு**

- 2030 ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் போதிய, பாதுகாப்பான, வாங்கும் திறனுக்கேற்ற வீட்டுவசதியும், அடிப்படை வசதிகளும் கிடைக்க வழிவகை செய்வதுடன், குடிசைப் பகுதிகளை மேம்படுத்தும் இலக்கினை அடைவதற்காக மாநில நகர்ப்புர வீட்டுவசதி மற்றும் குடியிருப்புக் கொள்கையை இந்த அரசு விரைவில் வெளியிடும். ஏழை, நடுத்தரக் குடும்ப மக்களும் வீட்டுவசதிச் சந்தையை எளிதில் அணுகி அவர்கள் வாங்கக்கூடிய விலையில் வீட்டுவசதி பெற வழிவகை செய்வதை அரசு உறுதி செய்யும்.

- ‘பிரதம மந்திரி வீட்டுவசதி (நகர்ப்புரம்) திட்டத்தின்’ கீழ் **1.97** இலட்சம் குடியிருப்புகளை கட்டுவதற்கான பணிகளை இந்த அரசு **2019–2020** ஆம் ஆண்டில் மேற்கொள்ளும். **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இதற்கென **2,662.16** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில், ஆற்றங்கரையோரம் வசித்துவரும் ஏழைக் குடும்பங்களுக்கு மிகச் சிறந்த மறுகுடியமர்த்தும் நடைமுறைகளைப் பின்பற்றி, உலக வங்கி உதவியுடன் **4,647.50** கோடி ரூபாய் செலவில், **38,000** குடியிருப்புகளை அமைப்பதற்காக ‘நகர்ப்புர ஏழை மக்களுக்கான தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம்’ செயல்படுத்தப்படும்.

- சென்னை தவிர்த்த இதர நகர்ப்புரப் பகுதிகளில் வீட்டுவசதியினை வழங்குவதற்கும், நகர்ப்புர ஏழைகளுக்குப் பயனளிக்கக்கூடிய வகையில் தொழிலக மற்றும் வாடகை வீட்டுவசதியினை போதுமான அளவில் உருவாக்குவதற்கும், நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வீட்டுவசதித் திட்டத்தை **5,000** கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கும் ஆசிய வளர்ச்சி வங்கியின் கடனுதவி கோரப்பட்டுள்ளது.

- சமுதாயத்திற்கு பயன்தரக்கூடிய முதலீடுகளைச் (**Social Impact Investments**) செய்யும் உள்நாட்டு மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களைக்

கவர்வதற்காக, தமிழ்நாடு உறைவிட நிதியம் உருவாக்கப்பட்டு, இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. வாங்கும் விலையில் தரமான வீட்டுவசதியை ஏழை எளிய மற்றும் நடுத்தரக் குடும்பங்கள் வாங்குவதற்கான உகந்த சூழலை ஏற்படுத்துவதற்காக இந்த நிதியம் பயன்படுத்தப்படும். பணிக்குச் செல்லும் பெண்களுக்குத் தேவையான தரமான, பாதுகாப்பான, குறைந்த விலையிலான விடுதி வசதியை அளிப்பதற்கும், மூத்த குடிமக்களுக்கும், மாற்றுத் திறனுடையோருக்கு உதவியாளருடன் தங்கும் குடியிருப்பு வசதியை ஏற்படுத்தித் தருவதற்கும் இந்த நிதியம் பயன்படுத்தப்படும்.

❖ மாநிலம் முழுவதையும் திட்டமிட்ட வளர்ச்சியின் கீழ் கொண்டு வருவதற்காக, மாநிலத்தை ஒன்பது நிலையான மண்டலங்களாகப் பிரித்து, மண்டலத் திட்டங்களை தயார் செய்வதுடன், மாநிலம் முழுமைக்குமான ஒரு முன்னோக்குத் திட்டத்தையும் இரண்டு ஆண்டுகளுக்குள் நகர் ஊரமைப்பு இயக்ககம் தயார் செய்யும். இதன் முதற்கட்டமாக, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மண்டலங்களுக்கான திட்டங்கள் தீட்டப்படும்.

❖ **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர மேம்பாட்டுத் துறைக்காக **6,265.52** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வறுமை ஒழிப்பு**

❖ தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், **31** மாவட்டங்களில் உள்ள **385** வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் மற்றும் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியவை மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஒரு அங்கமாகச் செயல்படுத்தப்படுகின்றன. **2019–2020** ஆம் ஆண்டில் இந்த இயக்கத்தைச் செயல்படுத்துவதற்காக **349.46** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ கிராமப்புற இளைஞர்கள் பயனடையும் வகையில், வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி அளிக்க 'தீனதயாள் உபாத்யாயா கிராமின் கௌசல்யா யோஜனா' திட்டத்தின் கீழ் **230.89** கோடி ரூபாய் வரும் நிதியாண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ❖ புது வாழ்வுத் திட்டத்தினைத் தொடர்ந்து, உலக வங்கியின் நிதியுதவியுடன் 918.20 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 'தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்' 2018–2019 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 26 மாவட்டங்களில் உள்ள 120 வட்டாரங்களில், 3,994 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமே ஊரகக் குறுந்தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பது ஆகும். 2019–2020 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 172 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ❖ 'தீனதயாள் உபாத்யாயா–தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின்' கீழ், நகர்ப்புர வறுமை ஒழிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தேசிய திட்டத்தின் நிதியை, 'தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின்' நிதியுடன் ஒருங்கிணைத்து மாநில அரசு பணிகளை மேற்கொண்டு வருகிறது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 'தீனதயாள் உபாத்யாயா தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்காக' 150 கோடி ரூபாயும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்காக 50 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாக 1,031.53 கோடி ரூபாய் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்காக இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நெடுஞ்சாலைத் துறை**

- ❖ 2018–2019 ஆம் ஆண்டில் 'ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்' (Comprehensive Road Infrastructure Development Programme) நிதி கணிசமாக உயர்த்தப்பட்டு 4,165.23 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2019–2020 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு 4,570.43 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ❖ 2019–2020 ஆம் ஆண்டில், செயல்பாடு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்த முறை (Performance Based Maintenance Contract) திட்டத்தின் கீழ், சிவகங்கை கோட்டத்திற்கு விரிவுபடுத்தப்பட்டு 622 கிலோமீட்டர் சாலைப் பணிகள் 715 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

- செயல்பாடு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்த முறையின் கீழ் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஆசிய வளர்ச்சி வங்கி போன்ற பன்னாட்டு வங்கிகளிடம் நிதியுதவி கோருவதற்கான விரிவானதொரு திட்டத்தை அரசு தயாரித்து வருகிறது.

- இம்முயற்சியை தொடர்ந்து மேற்கொள்வதற்காக, **2019–2020** ஆம் ஆண்டில் **1,986** கிலோமீட்டர் நீளமுள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் **1,142** கோடி ரூபாய் செலவில் இதர மாவட்ட சாலைகளுக்கு இணையாக தரம் உயர்த்தப்படும்.

- **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ‘தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்காக’ **459.74** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறைக்காக **13,605.19** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பள்ளிக் கல்வி**

- **2011–2012** ஆம் ஆண்டில் **63,178** ஆக இருந்த தொடக்கப் பள்ளிக்குச் செல்லாத குழந்தைகளின் எண்ணிக்கை, **2018–2019** ஆண்டில் **33,519** ஆக குறைந்துள்ளது

- புத்தகப் பைகள், காலணிகள், நோட்டுப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், வடிவியல் பெட்டிகள் உட்பட, மாணவர்களுக்கு விலையில்லாமல் வழங்கும் நலத் திட்டங்கள் தொடர்ந்து சிறப்பாகச் செயல்படுத்தப்படும். இதற்காக, **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **1,656.90** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் இடைநிற்றலைக் குறைப்பதற்கு, பத்து, பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவ மாணவியருக்கும் **5,000** ரூபாயை சிறப்பு ஊக்கத்தொகையாக இந்த அரசு தொடர்ந்து வழங்கும். இதற்காக,

வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **313.58** கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

- **2019–2020** ஆம் ஆண்டில் மடிக்கணினி வழங்கும் திட்டத்திற்காக, வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **1,362.27** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- அரசுப் பள்ளிகளுக்குப் போதுமான உட்கட்டமைப்பை வழங்குவதற்காக, நபார்டு வங்கியின் கடனுதவியுடன், **381.31** கோடி ரூபாய் செலவில் வகுப்பறைகள் கட்டுதல், ஆய்வகங்கள், கழிப்பறைகள் மற்றும் பிற வசதிகளை ஏற்படுத்துவதற்கான பணிகளை அரசு மேற்கொள்ளும்.

- 'அனைவருக்கும் கல்வி இயக்கம்' (Sarva Shiksha Abhiyan) மற்றும் 'அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்கம்' (Rashtriya Madhyamik Shiksha Abhiyan) ஆகியவற்றின் கீழ் நிலுவையாக உள்ள, முறையே **2,109.08** கோடி ரூபாய் மற்றும் **1,092.22** கோடி ரூபாயை மத்திய அரசு இதுவரை விடுவிக்கவில்லை.

- மத்திய அரசின் திட்டங்களான 'அனைவருக்கும் கல்வி இயக்கம்' மற்றும் 'அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்கம்' ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு, **2019–2020** ஆம் ஆண்டு முதல் 'ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டம்' (Samagra Shiksha Abhiyan) என்ற புதிய திட்டம் உருவாக்கப்பட்டு, அதைச் செயல்படுத்த **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **2,791.32** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், திட்டத்திற்காக **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **248.76** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பள்ளிக் கல்வித் துறைக்காக **28,757.62** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உயர்கல்வி**

- **2019–2020** ஆம் ஆண்டில், இராமேஸ்வரத்தில் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பெயரில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

- முதல் தலைமுறை பட்டதாரி மாணவ, மாணவியருக்கு கல்விக் கட்டணத்தைத் திரும்ப வழங்கும் திட்டத்திற்காக **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **460.25** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- சர்வதேசத் தரத்திற்கு கல்வி நிறுவனங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளுள் ஒன்றாக, தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவும் சட்டங்களை அரசு இயற்றி சிவசுப்ரமணிய நாடார் பல்கலைக்கழகம், சாய் பல்கலைக்கழகம் ஆகிய இரண்டு தனியார் பல்கலைக்கழகங்களை அரசு அனுமதித்துள்ளது. இதேபோன்ற முயற்சிகளை தேசிய உயர்கல்வி இரண்டாம் திட்டத்தின் (RUSA 2.0) கீழ் மேற்கொள்வதற்காக **382** கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

- மாநிலத்தின் முதன்மையான பல்கலைக்கழகமான அண்ணா பல்கலைக்கழகத்திலும், தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கட்டுப்பாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளிலும் சர்வதேசத் தரத்தில் கற்பித்தலுக்குத் தேவைப்படும் உபகரணங்கள் உள்ளிட்ட அதன் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, அண்ணா பல்கலைக்கழகத்திற்கு **100** கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

- **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் உயர்கல்வித் துறைக்காக **4,584.21** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு**

- ‘முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை’ தமிழ்நாடு அரசு **2012** ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்ட **2011–2012** ஆம் ஆண்டு முதல், இதுவரை **28.34** இலட்சம்

நபர்கள், **5,527** கோடி ரூபாய் அளவிலான மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுள்ளனர்.

- ‘முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை’ மத்திய அரசின் முன்னோடித் திட்டமான ‘பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா’ திட்டத்துடன் ஒருங்கிணைத்து, ஆண்டு ஒன்றிற்கு ஒரு குடும்பத்திற்கான காப்பீட்டுத் தொகை **2** இலட்சம் ரூபாயிலிருந்து **5** இலட்சம் ரூபாயாக **2018** ஆம் ஆண்டு டிசம்பர் **1** ஆம் தேதி முதல் உயர்த்தப்பட்டுள்ளது. **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்கான காப்பீட்டுக் கட்டணத் தொகைக்காக **1,363** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தகுதி வாய்ந்த அனைத்து கர்ப்பிணிப் பெண்களின் முதல் பிரசவத்திற்கு மட்டும் நிதியுதவி வழங்க வகை செய்யும் மத்திய அரசின் ‘பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா திட்டத்துடன்’ மாநில அரசின் ‘டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்’ இணைக்கப்பட்டுள்ளது. **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்திற்காக **959.21** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- மாநிலத்தில் உள்ள இடைநிலை மற்றும் உயர்நிலை அரசு மருத்துவமனைகளின் மேம்பாட்டிற்காக ‘தமிழ்நாடு நகர்ப்புர சுகாதாரத் திட்டத்தை’ **1,634** கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்காக **242.92** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- அரசு மருத்துவமனைகள் மூலம் கிடைக்கும் மருத்துவ வசதிகள் ஏழை எளிய மற்றும் நலிவடைந்த பிரிவினருக்கு எளிதில் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்வதற்காக, உலக வங்கி கடனுதவியுடன் **2,685.91** கோடி ரூபாய் செலவில் ‘தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டம்’ விரைவில் செயல்படுத்தப்படும்.

- அனைத்து நிலை மருத்துவமனைகளிலும் முக்கிய உடற் பரிசோதனைகள் தொகுப்பாகக் கிடைப்பதை உறுதிசெய்யக்கூடிய முக்கியமான இலட்சியத்

திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும். இத்திட்டத்திற்கென மூன்று ஆண்டுகளில் 247 கோடி ரூபாய் செலவிடப்படும்.

- 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறைக்காக 12,563.83 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**போக்குவரத்து**

- மாநில அரசு 5,890 கோடி ரூபாய் செலவில் 12,000 புதிய **BS-VI** தரத்திலான பேருந்துகளையும், 2,000 மின்சாரப் பேருந்துகளையும் வாங்கிப் பயன்படுத்தும் வகையில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

- இத்திட்டத்தின் முதல் கட்டத்தில் 500 மின்சாரப் பேருந்துகளை சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களிலும் 2,000 **BS-VI** பேருந்துகளை மாநிலம் முழுவதும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

- 2018–2019 ஆம் ஆண்டில் டீசல் விலை உயர்வின் காரணமாக ஏற்படும் நிதியிழப்பை ஈடுசெய்ய, போக்குவரத்துக் கழகங்களுக்கு கூடுதலாக 333.07 கோடி ரூபாய் 'டீசல் விலை இழப்பீடாக' இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

- 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாணவ, மாணவியருக்கான போக்குவரத்து பயணக் கட்டணச் சலுகைக்காக 766 கோடி ரூபாய் மற்றும் டீசல் மானியத்திற்காக 250 கோடி ரூபாய் உட்பட, போக்குவரத்துத் துறைக்காக 1,297.83 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**எரிசக்தி**

- பசுமை எரிசக்தியை மேம்படுத்தும் நோக்கத்தில், தேனி, சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் 1,125 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 250 மெகாவாட் திறன் கொண்ட மிதக்கும் சூரியசக்தி (**Floating Solar**) மின் திட்டங்களும், 2,350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 500 மெகாவாட் திறன் கொண்ட கடலாடி மிக உய்ய சூரிய மின்னழுத்தப் பூங்கா திட்டமும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மூலம் செயல்படுத்தப்படும்.

- சாகுபடிக்கு பயன்படாத சமுதாய மற்றும் பட்டா நிலங்களில், புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில், பசுமைச் சூழல் நிதியத்தின் கீழ் உள்ள நிதியிலிருந்து, 5 மெகாவாட் திறன் கொண்ட சிறிய அளவிலான ஊரக புதுப்பிக்கத்தக்க மின் பூங்காவுடன், 'அம்மா பசுமை கிராமம்' என்ற நிலையான மின் கிராமங்களை, தமிழ்நாடு மின் மேம்பாட்டு முகமை (**Tamil Nadu Energy Development Agency**) ஏற்படுத்தும்.

- அண்மையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட 2019 தமிழ்நாடு சூரியஒளி மின்சக்தி கொள்கை, மாநிலத்தின் சூரியஒளி மின்சக்தி உற்பத்தித் திறனை, 2023 ஆம் ஆண்டுக்குள் 9,000 மெகாவாட் அளவிற்கு உயர்த்த வழிவகை செய்யும்.

- விவசாயம் மற்றும் இதர நுகர்வோர்கள் உட்பட பல்வேறு வகையான நுகர்வோருக்கு வழங்கப்படும் மின் மானியம் தொடர்ந்து வழங்கப்படும். இதற்காக 8,118.25 கோடி ரூபாய் இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் எரிசக்தித் துறைக்கு 18,560.77 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சென்னை மெட்ரோ இரயில்**

- சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதற்கட்டத்தில் 45.01 கிலோமீட்டர் நீளமுள்ள இரண்டு வழித்தடங்கள் 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் மக்கள் பயன்பாட்டிற்கு முழுமையாக வரவுள்ளன.

- திருவொற்றியூர் மற்றும் விம்கோ நகர் வரையிலான ஒன்பது கிலோமீட்டர் நீளமுள்ள முதற்கட்டத்தின் நீட்டிப்புப் பணிகள் நிறைவுற்று, 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்கு வரும்.

- ஏற்கெனவே அறிவித்தபடி, மீனம்பாக்கம் விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம் மெட்ரோ பேருந்துப் பணிமனை வரை மெட்ரோ இரயில் திட்ட வழித்தடம் நீட்டிப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

- ❖ சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ், 118.90 கிலோமீட்டர் நீளமுள்ள மூன்று மெட்ரோ இரயில் வழித்தடங்களில் மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலும், மாதவரம் முதல் சென்னை கோயம்பேடு பேருந்து நிலையம் வரையிலுமான 52.01 கிலோமீட்டர் நீளமுள்ள வழித்தடங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை 20,196 கோடி ரூபாய் நிதியுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கு மாநில அரசும் 40,941 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் இத்திட்டப்பணிகளை மேற்கொள்ள நிருவாக அனுமதி அளித்துள்ளது. இத்திட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

- ❖ 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மெட்ரோ இரயில் திட்டத்திற்கான பங்கு மூலதனம் மற்றும் கடனாக மொத்தம் 2,681 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழிலாளர் நலன்**

- ❖ மத்திய அரசு தற்போது அறிவித்துள்ள ஓய்வூதியத் திட்டத்தின் பயனை அமைப்புசாரா தொழிலாளர் பெறும் வகையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான நலவாரியங்களுக்கு மானியம் வழங்க இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 148.83 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்பு மற்றும் திறன் பயிற்சி**

- ❖ மருத்துவ மின்னணுவியல், கட்டட வடிவமைப்பு, வாகனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் வண்ணம் தீட்டுதல், நவீன இயந்திரங்கள் இயக்குதல், தொழில்நுட்ப மின்னணுவியல், தீயணைப்புத் தொழில்நுட்பம் மற்றும் தொழில்துறை பாதுகாப்பு மேலாண்மை போன்ற, நவீன உயர்நிலை தொழிற்பிரிவுகளுக்கான பயிற்சி ஆகியவை 20 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களில் 38 கோடி ரூபாய் செலவில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.

- ❖ ஒரு சிறப்பான முன்முயற்சியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து மாவட்டத் தலைமையிடங்களில், வேலைவாய்ப்பற்ற பொறியியல் பட்டதாரிகளுக்கு உயர்நிலை தொழில்நுட்பத் திறன் பயிற்சியை அளிப்பதற்கான பயிற்சி மையங்கள் அரசு–தனியார் பங்களிப்பு முயற்சியில் இந்த அரசால் வரும் நிதியாண்டில் ஏற்படுத்தப்படும். இதன் மூலம், வளர்ந்து வரும் தொழில்நுட்பப் பிரிவுகளில் உள்ள சிறப்பு தகுதித் திறன் தேவைப்படும் பணியிடங்களில்,

ஆண்டுதோறும் 10,000 வேலையில்லா பொறியியல் பட்டதாரிகள் பயிற்சி பெற்று வேலைவாய்ப்பைப் பெறுவார்கள்.

❖ 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பிரதம மந்திரி திறன் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 51.64 கோடி ரூபாயும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கு வழங்க 200 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை**

❖ புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட கைத்தறி உதவித் திட்டத்தை 2019–2020 ஆம் ஆண்டில் செயல்படுத்துவதற்காக 40 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ ஏழைக் குடும்பங்களுக்கு ‘விலையில்லா சேலைகள் வேட்டிகள் வழங்கும் திட்டத்தை’ தொடர்ந்து செயல்படுத்துவதற்காக, 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 490.20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ கைவினைப் பொருட்கள் விற்பனையை ஊக்குவிப்பதற்காக, நாட்டிலேயே முதன்முறையாக, வாடிக்கையாளர்கள் இணையவழியாகக் கொள்முதல் செய்யும் வகையில், ‘மெய்நிகர் தோற்ற (Virtual Reality) விற்பனை நிலையத்தை’ தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் மேம்பாட்டுக் கழகம் உருவாக்கி வருகிறது.

❖ 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கு 1,170.56 கோடி ரூபாயும், கைவினை மற்றும் கதர்த் துறைக்கு 211.11 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**தகவல் தொழில் நுட்பவியல்**

❖ தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் இரண்டாம் கட்டப் பணிகளை நீட்டிக்கவும், அதனை தமிழ்நெட் திட்டத்துடன் ஒருங்கிணைத்திடவும் 443.64 கோடி ரூபாய்க்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

❖ செயற்கை நுண்ணறிவு, இயந்திரக் கற்றல், தொகுப்புத் தொடர், மிகைத் தரவு, ட்ரோன்கள் மற்றும் பொருட்களின் இணையம் போன்ற தொழில்நுட்பங்கள் மக்களுக்கு சிறப்பாக சேவையாற்றும் வகையில் பயன்படுத்தப்படும். இதற்கென, தமிழ்நாடு மின்–ஆளுமை முகமையின் கீழ் 'வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கான உயர் மையம்' ஏற்படுத்தப்படும்.

❖ இந்த வரவு–செலவுத் திட்டத்தில் தகவல் தொழில்நுட்பத் துறைக்கு 140.62 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழில்துறை**

❖ முதலீட்டிற்கான முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளது என்பதை, 2019 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் மாநாடு பறைசாற்றியுள்ளது, இம்மாநாட்டில், மூன்று இலட்சம் கோடி ரூபாய்க்கான முதலீடுகளை ஈர்ப்பதற்கான 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதலீட்டாளர்களுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டங்களால், 10.45 இலட்சம் நபர்கள் வேலைவாய்ப்பு பெறுவார்கள். இம்மாநாட்டின்போது, உற்பத்தி, தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள், சில்லறை விற்பனை பூங்கா, வீட்டுவசதி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, உணவு பதப்படுத்துதல் மற்றும் கல்வி உட்பட பல்வேறு துறைகளில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் மாநாடு மூலம் சிறுகுறு நடுத்தர தொழில்களுக்கு 32,206 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு பெறப்பட்டுள்ளது. தென் மாவட்டங்கள் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் போன்ற தொழில்ரீதியாக பின்தங்கிய மாவட்டங்களில் முதலீடுகள் செய்வதற்கும் இந்த மாநாடு வழிவகுத்துள்ளது. மாநிலத்தின் மேற்கு மண்டலத்தில், குறிப்பாக துணி, ஆயத்த ஆடைகள் மற்றும் பொறியியல் துறைகளில் இந்த மாநாட்டின் மூலம் கூடுதல் முதலீடுகளை நாம் ஈர்த்துள்ளோம்.

❖ மாண்புமிகு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களால், சென்னை, ஒசூர், சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சியில் 3,123 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மத்திய பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் மூலம் பாதுகாப்புத் தளவாடங்கள் தயாரிக்கும் தமிழ்நாடு பாதுகாப்பு உபகரணங்கள் உற்பத்தி முனையங்கள் சமீபத்தில் தொடங்கி வைக்கப்பட்டன.

- ❖ இத்திட்டத்திற்கு கூடுதல் ஊக்கம் அளிக்கும் வகையில், 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை வெளியிடப்பட்டுள்ளது. இக்கொள்கையின் கீழ், வானூர்தி மற்றும் இராணுவத் தளவாடங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை மாநிலத்தில் அமைப்பவர்களுக்கு உரிய ஊக்கம் அளிக்கப்படும்.

- ❖ 2018–2019 ஆம் ஆண்டில் முதலீட்டு மானியமாக அரசு 2,000 கோடி ரூபாய் வழங்கியுள்ளதுடன், 2019–2020 ஆம் ஆண்டிற்கு 2,500 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தொழில் துறைக்கு 2,747.96 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள்**

- ❖ தொழில் முனைவோர்கள் தொழில் நிறுவனங்களை தமிழகத்தில் தொடங்குவதற்கு சாதகமான சூழலை புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் மேம்பாட்டுத் திட்டம் ஏற்படுத்தியுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்காக 87.92 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ❖ புதிய தொழில் நிறுவனங்களுக்கான நிலத் தேவைகள் அதிகரித்திருப்பதைக் கருத்தில் கொண்டு, திருமுடிவாக்கம் மற்றும் ஆலத்தூர் தொழிற்பேட்டைகள் மேலும் விரிவுபடுத்தப்படும்.

- ❖ வேளாண் மின்பாதை மூலம் மின் விநியோகம் பெறும் தமிழ்நாடு சிறுதொழில்கள் மேம்பாட்டுக் கழகத்தால் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் தொழிற்பேட்டைகளில் இயங்கி வரும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தடையற்ற தரமான மின்சாரத்தைப் பெறுவதற்காக, 2019–2020 ஆம் ஆண்டில் தனியாக தொழில் மின்பாதை அமைக்கப்பட்டு, இத்தொழிற்பேட்டைகளுக்கு சீராக மின் விநியோகம் வழங்கப்படும்.

- ❖ தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் வெளிநாட்டு முதலீட்டினை ஊக்குவிக்கவும், அந்நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகள் சர்வதேச சந்தைகளுக்கு சென்றடைவதற்கும் உதவக்கூடிய, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான வர்த்தக மற்றும் முதலீட்டு மேம்பாட்டு மையம்

(**MSME Trade and Investment Promotion Bureau**) **என்ற ஒரு புதிய** அமைப்பை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தும்.

- 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறைக்காக 476.26 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுற்றுலா, கலை மற்றும் பண்பாடு**

- ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன், சுற்றுலாத் தலம் மற்றும் சுற்றுலாச் சுற்று அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டத்தின் நான்காவது கட்டத்திற்கு 288 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கு மகத்தானதொரு திட்டத்தை அரசு தனியார் பங்களிப்பு முறையில் இந்த அரசு செயல்படுத்தும். இதனால் பெரிய அளவில் வேலைவாய்ப்பு உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2019–2020 ஆம் ஆண்டில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக, வரவு–செலவு திட்டத்தில் 100 கோடி ரூபாய் தொடக்க முதலீடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சுற்றுலாத் துறைக்கு 186.23 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கலை பண்பாட்டுத் துறைக்கு 56.23 கோடி ரூபாயும், அருங்காட்சியகங்கள் துறைக்கு 14.65 கோடி ரூபாயும், தொல்லியல் துறைக்கு 10.19 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**இந்து சமய அறநிலையத் துறை**

- 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இந்து சமய அறநிலையத் துறைக்கு 281.86 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சமூக நலன்**

- முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்திற்காக 2019–2020 ஆம் ஆண்டிற்கு 140.11 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்களுக்காக **726.32** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- மேலும், பணிபுரியும் மகளிருக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கும் 'அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தை' தொடர்ந்து செயல்படுத்துவதற்காக **250** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்காக **1,772.12** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுப் பணிகள் திட்டத்தைச் செயல்படுத்த **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **2,052.22** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சமூகநலத் துறைக்காக **5,305.51** கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்**

- **2019–2020** ஆண்டில் பள்ளிக் கல்வி உதவித்தொகை, உயர்கல்வி உதவித்தொகை திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த **290.71** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், **2019–2020** ஆம் ஆண்டில் பள்ளி மற்றும் தொழிற்பயிற்சி மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்குவதற்காக அரசு **138.48** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

- **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், விடுதி மாணவ மாணவியருக்கான உணவுச் செலவினங்களுக்காக **79.23** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்காக **911.47** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சிறுபான்மையினர் நலன்**

- மொழி மற்றும் மத அடிப்படையிலான சிறுபான்மையினரின் நலன் காக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. அனுமதிக்கப்பட்டுள்ள 1,300 சிறுபான்மையின ஏழை மாணவ மாணவிகளின் நலனுக்காக 16 சிறுபான்மையினர் நல விடுதிகள் அரசால் பராமரிக்கப்படுகின்றன. 2019–2020 ஆண்டிற்கு 14.99 கோடி ரூபாய் சிறுபான்மையினர் நலத் துறைக்காக அரசு ஒதுக்கியுள்ளது.

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்**

- 20 விடுதிக் கட்டடங்கள் கட்டுவதற்கு 40 கோடி ரூபாயை 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

- கல்லூரி மற்றும் பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கான மாதாந்திர உணவுக் கட்டணம் வழங்குவதற்காக, வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 103.55 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- உயர்கல்விக்கான உதவித்தொகை திட்டத்திற்கான (Post-Matric Scholarship) வழிகாட்டு முறைகளில் மத்திய அரசு அண்மையில் மேற்கொண்ட மாற்றங்களினால், மத்திய அரசின் நிதிச்சுமை மாநில அரசிற்கு மாற்றப்பட்டு தமிழ் நாட்டின் நிதிப் பொறுப்பு 353.55 கோடி ரூபாயிலிருந்து, 1,526.46 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. மேலும், தொடர்ந்து நீண்டகாலமாக நிலுவையிலுள்ள தொகையினை விடுவிக்க மத்திய அரசினை தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளபோதும், மத்திய அரசு 985.80 கோடி ரூபாயை இதுவரை விடுவிக்கவில்லை.

- உயர்கல்வி உதவித்தொகைக்காக 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநில அரசு 1,857.13 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

- பெண் குழந்தைகளின் சேர்க்கையினை 3 முதல் 8 வரை உள்ள வகுப்புகளில் ஊக்கப்படுத்தும் வகையில் ரொக்கப் பரிசு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் 48.70 கோடி ரூபாய் வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீட்டுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

- அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்குவதற்கு 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 71.01 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

- சிறப்புத் திட்டத்தின் மூலம் ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக, நடப்பு ஆண்டில் தொடங்கப்பட்ட நடவடிக்கைகளைத் தொடர்வதற்காக, 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளிலும் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தொலைவிடங்களில் அமைந்துள்ள பழங்குடியினப் பகுதிகளில், பழங்குடியின மாணவர்கள் பயன்பெறும் வகையில், அரசு சாரா அமைப்புகள் புதிய பள்ளிக்கூடங்களைத் தொடங்குவதற்கு ஊக்கத்தொகை வழங்க, ஆரம்பகட்ட ஒதுக்கீடாக 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ஆதி திராவிடர்களுக்கான பொருளாதார மேம்பாட்டிற்கான சிறப்பு மத்திய நிதியுதவியின் கீழ் 135 கோடி ரூபாய் உட்பட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்காக 3,810.28 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பழங்குடியினர் நலனுக்காக 482.80 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாற்றுத் திறனாளிகள் நலன்**

- தற்போதைய தேவையைக் கருத்தில் கொண்டு 2019–2020 ஆம் ஆண்டிற்கு இதற்கான ஒதுக்கீடு உயர்த்தப்பட்டு 3,000 சிறப்பு சக்கர நாற்காலிகளும் 3,000 பெட்ரோல் ஸ்கூட்டர்களும் வழங்கப்படும்.

- 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக 572.19 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு**

❖ 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கென 168.27 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் நலன்**

❖ அரசுப் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்களுக்கான காப்பீட்டுத் தவணைத் தொகை செலுத்துவதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில், முறையே 253 கோடி ரூபாய் மற்றும் 299.28 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

## பாகம் – ஆ

## வரவு–செலவுத் திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள்

❖ மாநில கருவூலத் துறை நடவடிக்கைகளை மனிதவள தரவுகளுடனும், வரவு செலவுத் திட்டத்துடனும் ஒருங்கிணைத்து செயல்படுத்தும் பொருட்டு ‘ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம்’ தொடங்கப்பட்டுள்ளது. இத்தகைய திட்டம் நாட்டிலேயே முதலாவதாக தமிழ்நாட்டில் தான் செயல்முறைக்கு வந்துள்ளது.

❖ 2018–2019 ஆம் ஆண்டிற்கான வணிகவரியின் வருவாய், திருத்த மதிப்பீடுகளில் 84,365.91 கோடி ரூபாயாகவும், 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 96,177.14 கோடி ரூபாயாகவும் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

❖ மாநில ஆயத்தீர்வைகளில் தற்போதுள்ள போக்கினைக் கருத்தில் கொண்டு, இதன் வருவாய் வரவினம் 2018–2019 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 6,724.38 கோடி ரூபாயாகவும், 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 7,262.33 கோடி ரூபாயாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖ முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவுக் கட்டணங்களின் கீழ் பெறப்படும் வருவாய் வரவினங்களில் நல்ல வளர்ச்சி காணப்படுவதால், 2018–2019 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் முத்திரைத்தாள் மற்றும்

பத்திரப்பதிவுக் கட்டணங்களின் கீழ் பெறப்படும் வருவாய் **11,512.10** கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

- நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு அல்லது மறுகட்டமைப்பு (ஹஅயடபயஅயவடைடே டிச சுநஉடிளேவசரஉவடைடே) தொடர்பான சொத்துப் பரிமாற்றங்களுக்கான முத்திரைத் தீர்வை சொத்தின் சந்தை மதிப்பில் **2** சதவீதம் அல்லது பங்குகளின் ஒட்டுமொத்த சந்தை மதிப்பில் **0.6** சதவீதம், இதில் எது அதிகமோ அது நிர்ணயிக்கப்படும். அதேபோல, இத்தகைய பரிமாற்றங்களுக்கான பதிவுக் கட்டணம் அதிகபட்சமாக **30,000** ரூபாய் என நிர்ணயிக்கப்படும். இதன் மூலம், இத்தகைய பரிமாற்றங்களின் மீது செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் குறித்த தெளிவு ஏற்படும்.

- **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவுக் கட்டணங்களின் கீழ் பெறப்படும் வருவாயாக **13,122.81** கோடி ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது. இது, **2018–2019** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளை விட **2,187.14** கோடி ரூபாய் அதிகமாகும்.

- **2018–2019** ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் வாகனங்கள் மீதான வரி வருவாய் **5,918.82** கோடி ரூபாயாக இருக்கும் எனவும், **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் **6,510.70** கோடி ரூபாயாக இருக்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

- **2018–2019** ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வரவினங்கள் **1,10,178.43** கோடி ரூபாயாக உயர்த்தி கணிக்கப்பட்டுள்ளதுடன், **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **1,24,813.06** கோடி ரூபாயாக இருக்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநிலத்தின் சொந்த வரியல்லாத வருவாய் **13,326.91** கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

- **2018–2019** ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில், **30,638.87** கோடி ரூபாயாகவும், **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட

மதிப்பீடுகளில் **33,978.47** கோடி ரூபாயாகவும் மத்திய வரிகளில் பங்கு இருக்குமென கணிக்கப்பட்டுள்ளது.

❖ தற்போதைய போக்குகளின் அடிப்படையிலும், மத்திய அரசு தனது **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் செய்த நிதி ஒதுக்கீடுகளின் அடிப்படையிலும், **2019–2020** ஆம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் **25,602.74** கோடி ரூபாயாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

**நிதிநிலைக் குறியீடுகள்**

❖ **2018–2019** ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில், மாநிலத்தின் மொத்த வருவாய் வரவுகள் **1,80,618.71** கோடி ரூபாயாகவும், வருவாய்ச் செலவினங்கள் **1,99,937.73** கோடி ரூபாயாகவும் இருக்கும். இதன் விளைவாக, **2018–2019** ஆம் ஆண்டிற்கு வருவாய்ப் பற்றாக்குறை **19,319.02** கோடி ரூபாயாக இருக்குமென கணிக்கப்பட்டுள்ளது. **2019–2020** ஆம் ஆண்டில், மாநிலத்தின் மொத்த வருவாய் வரவுகள் **1,97,721.17** கோடி ரூபாயாக இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது.

❖ **2019–2020** ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய்ச் செலவினங்கள் **2,12,035.93** கோடி ரூபாயாகவும், இதன் விளைவாக வருவாய்ப் பற்றாக்குறை **14,314.76** கோடி ரூபாயாகவும் இருக்கும் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

❖ **2018–2019** ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில், **26,191.98** கோடி ரூபாய் மூலதனச் செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவே, **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், **31,251.21** கோடி ரூபாய் நிதியாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடு **2018–2019** ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டை விட **19.32** சதவீதம் கூடுதலாகும்.

❖ **2018–2019** ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில், நிதிப் பற்றாக்குறை விகிதம், மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் **2.85** சதவீதமாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

- ❖ **2019–2020** ஆம் ஆண்டில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை விகிதம் **2.56** சதவீதமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறைக்கு வரையறுக்கப்பட்ட மூன்று சதவீதத்திற்கு குறைவானதாகும்.

- ❖ **2018–2019** ஆம் ஆண்டில் இந்த அரசு சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு, அனுமதிக்கப்பட்ட அளவான **47,350** கோடி ரூபாய்க்கும் குறைவான அளவிலேயே, அதாவது **44,066.82** கோடி ரூபாயை மட்டுமே நிகரக் கடனாகத் திரட்டி கடன் அளவைக் கட்டுப்படுத்தியுள்ளது. **2019–2020** ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட நிகரக் கடன் அளவு **51,800** கோடி ரூபாயாக இருந்தாலும் **43,000** கோடி ரூபாய் அளவிலேயே நிகர கடன் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, **2020** ஆம் ஆண்டு மார்ச் திங்கள் **31** அன்று, நிகர நிலுவைக் கடன்கள் **3,97,495.96** கோடி ரூபாயாக இருக்கும். மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் இந்த நிலுவைக் கடன் அளவு **23.02** சதவீதமாக இருக்கும் என்பதால், அனுமதிக்கப்பட்ட **25** சதவீத அளவிற்கு உட்பட்டே கடன் அளவு இருக்கும்.